# குன்னத்தூர் மலை







மதுரையிலிருந்து சிவகங்கை செல்லும் சாலையில் சுமார் 15 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இங்கிருந்து களிமங்கலம் செல்லும் வழியில் குன்னத்தூருக்கு முன்பாக குன்னத்தூர் மலை உள்ளது. இங்குள்ள மூன்று தமிழ் பிராமி கல்வெட்டுகளும் சமணத்துறவியர் தங்கியிருந்த கற்படுக்கைகளும் சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இக்கல்வெட்டுகள் உள்ளமலை உதயகிரி என்றும் சுப்ரமண்யமலை என்றும் அழைக்கப்படுகிறது. கி.பி.1908 ஆம் ஆண்டு இங்குள்ள தமிழ்பிராமி கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தமிழ்பிராமிக் கல்வெட்டுக்தளம் உள்ள குகையில் மழைநீர் புகாமல் நீர்வடி விளிம்புகள் வெட்டப்பட்டுள்ளன. இவ்விளிம்புகளின் மேலும் கீழுமாக கல்வெட்டுகள் உள்ளன.

‘இளநாதன் கருஇய நல்முழஉகை‘
ஆடா..றைாதா வைக.. ஒன்நூறுகல நெல்‘
‘பளிய் கொடுபி‘

என இம்மூன்று கல்வெட்டுகளும் வாசிக்கப்பட்டுள்ளன. இக்குகைதளத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட கற்படுக்கைகள் உள்ளன. ஒரு படுக்கையில் கி.பி.15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகர அரசர் கல்வெட்டு உள்ளது. இதில் வரிச்சியூர் என்று ஊரின்பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

**குடைவரைக்கோவில்கள்**

இக்குகையின் மேற்குப் பகுதியில் கிழக்கு நோக்கியவாறு ஒரு சிறிய குடைவரைக்கோவிலில் உள்ளது. இக்கோவில் ஒருகருவறையும், ஒருசிறு முற்றமும் மட்டுமே உள்ளன. கருவறையில் சிவலிங்கம் இருக்க முன்வாயிலில் இருகாவலர் சிற்பங்கள் காணப்படுகின்றன. தென்சுவரில் விநாயகர் புடைப்புச்சிற்பம் உள்ளது. கிழக்கு நோக்கிய கருவறையாக இருப்பதால் இக்கோவில் உதயகிரி ஈஸ்வரர் கோவில் என அழைக்கப்படுகிறது. சூரியன் உதயமாகும் கிரி (மலை) என்று பொருள்படும்படியாக இப்பெயர் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற மற்றொரு கோவில் மலையின் மேற்கில் அஸ்தகிரிஈஸ்வரர் என்ற பெயரில் வெட்டப்பட்டுள்ளது. சூரியன் மறையும் திசையில் உள்ளதால் இக்கோவிலுக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஒரு கட்டுமானக் கோவிலின் உறுப்புகள் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டும் ஒரு முன்னோடித் தோற்றம் இக்கோவில் செதுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு கோவில்களும் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அதாவது இன்றைக்கு 1200 ஆண்டுகட்கு முற்பட்டவை. முற்பாண்டியர் கோவிற்கலை வரலாற்றுக்கு அழியாச் சான்றுகளாய் இவை நிற்கின்றன.

அஸ்தகிரீஸ்வரர் கோவிலுக்கு மேற்கே நீலகண்டேஸ்வரர்கோவில் என்றழைக்கப்படும் மற்றொரு குடைவரைக்கோவில் உள்ள குன்று உள்ளது. இக்குன்றில் கிழக்கு நோக்கி எடுக்கப்பட்ட சிவன்கோவில் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. குடவரையின் கருவறையில் சிவலிங்கம் உள்ளது. முன்மண்டபத்தில் விநாயகர் வாயிற்காவலர் சிற்பங்கள் உள்ளன. இக்குடைவரைக்கு வெளியே தென்புறப்பகுதியில் சப்தமாதர் சிற்பங்கள் வீரபத்திரர் உருவத்தோடு புடைப்பு சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. இவையும் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.